கமண்டல நாக நதியின் குறுக்கே அணை

திரு. எல். பலராமன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம் கமண்டல நாக நதியின் குறுக்கே அமர்த்தி என்னுமிடத்தில் அணை கட்ட சர்வே செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் நிலை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இதை எப்போது எடுத்துக் கொள்ள அரசு உத்தேசித்திருக்கிறது, இதற்கான அங்கீகாரத்தை அரசு வழங்கியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கெனவே சொன்னதுபோல, ஸ்தல அதிகாரிகளின் பரிசீலனையில் இருக்கிறது. இத்திட்டத்திற்கான செலவு ரூ. 55 லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால் கிட்டத்தட்ட 22,500 ஏக்காவிற்கு நிலையான பாசன வசதி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

Ambar Charkas

***303 *Q.*—Thiru V. ISVARMURTI :** Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of Ambar Charkas used by the Khadi Department to give employment in the rural areas as on date; and

(*b*) the total expenditure incurred for implementing the Scheme?

அம்பர் ராட்டைகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பளிப்பதற்காக கதர்த் துறையால் நாளதுவரை பயன்படுத்தப்படும் அம்பர் ராட்டைகள் எத்தனை ?

(இ) இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆன செலவு எவ்வளவு ?

1972 நவம்பர் 14]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) 40,575 அம்பர் இராட்டைகள் தயாரிக்கப்பட்டன அல்லது வாங்கப்பட்டன. இவற்றுள், 3,945 இராட்டைகள் தற்போது பயன்பட்டு வருகின்றன.

(இ) அம்பர் இராட்டைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மொத்தச் செலவு ரூ. 58.26 இலட்சம் ஆகியுள்ளது.

Thanjavur Co-operative Marketing Federation, Tiruvarur

* 304 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have superseded the Thanjavur Co-operative Marketing Federation, Tiruvarur; and

(*b*) if so, the reasons therefor?

திருவாரூரிலுள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவாரூரிலுள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பினை அது செயற்படுவதிலிருந்து அரசு தள்ளி வைத்துவிட்டதா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) செயற்குழு ஒழுங்காக நடைபெறவில்லை என்று கூட்டுறவுத் துறைப் பதிவாளர் கருதியதால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு கூட்டமைப்பில் ஒழுங்கீனம் காரணமாக நஷ்டமேற்பட்டிருப்பதாக அரசு அறிந்து அதன் காரணமாக இந்தக் கூட்டமைப்பு செயல்படுவதிலிருந்து தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, செயற்குழு ஒழுங்காக நடைபெறவில்லை, அதற்கு வாய்ப்பில்லை என்று கருதியதால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. செயற்குழு கலைக்கப்பட்டது. அது ஒழுங்கீனமாகவும் ஒழுங்கில்லாமலும் இருந்ததற்கு உடனடியான காரணம் என்னவென்றால், அதிலே இருந்த எட்டு இயக்குநர்கள் பதவியிலிருந்து ராசினாமாச் செய்தார்கள். 'கோரம்' இல்லை. ஆகவே அதுவே போதுமான காரணம் என்று கருதி, அந்தக் கூட்டமைப்பு 'சூபர்சீட்' செய்யப்பட்டது.